2011 செப்டம்பர் 14] [செல்வி ஜெ ஜெயலலிதா]

நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதியின் தலைமையில் விசாரணைக் கமிஷன் அமைக்கப்படும் என்று நான் அறிவித்தேன். அதன்பின்னர், ஏற்கெனவே உயிரிழந்தவர்களின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அறிவிக்கப்பட்ட 1 இலட்சம் ரூபாய் இழப்பீட்டுத் தொகையை இன்னும் அதிகப்படுத்தித் தரவேண்டுமென்ற கோரிக்கையை வைத்தார்கள். ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையில் விசாரணைக் கமிஷன் அமைத்தபின்னர், ஏற்கெனவே வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகையை இன்னும் உயர்த்தித் தரவேண்டுமென்றால், அந்த விசாரணைக் கமிஷன்தான் பரிந்துரை செய்யவேண்டும். ஆகவே, விசாரணைக் கமிஷன் தன்னுடைய விசாரணையை முடித்து, அறிக்கை தரும்போது என்ன பரிந்துரை செய்கிறதோ, இன்னும் அதிகமாக அவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை கொடுக்கவேண்டுமென்று அந்த அறிக்கையில் கூறப்பட்டால் நிச்சயமாக இந்த அரசு அதை ஏற்றுக்கொண்டு செயல்படுத்தும்.

முற்பகல் 10-15

அதைப்போலவே, இன்றுகூட இந்தப் பிரச்சினையை எழுப்ப முற்பட்ட சில மாண்புமிகு உறுப்பினர்கள், துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்டிருந்த சில காவல் துறை அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்; suspend செய்யவேண்டும் என்றெல்லாம் கோரிக்கை வைத்தார்கள். அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதற்காகத்தான் அவர்கள் வெளிநடப்பும் செய்திருக்கிறார்கள்.

ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் விசாரணைக் கமிஷன் அமைக்கவில்லையென்றால் அது வேறு. நான் ஆரம்பத்தில் D.R.O. enquiry நடத்தப்படும் என்றுதான் அறிவித்தேன். ஏனென்றால் D.R.O. enquiry-இன் அறிக்கை உடனடியாகக் கிடைத்துவிடும், அதன்மீது உடனடியாக நாம் நடவடிக்கையை எடுக்கமுடியும். மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள்தான், ஓய்வுபெற்ற நீதிபதியின் தலைமையில் விசாரணைக் கமிஷன் வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள்.

ஒரு விசாரணைக் கமிஷனையும் அமைத்துவிட்டு பின்னர் அரசு தன்னிச்சையாக நடவடிக்கையை எப்படி எடுக்க முடியும்? ஆகவே, விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டிருப்பதால், அந்த விசாரணைக் கமிஷனுக்குத் தலைமை ஏற்றிருக்கிற நீதிபதி,

இதனைத் தீவிரமாக விசாரணை செய்து அறிக்கை கொடுத்த பின்னர், அந்த அறிக்கையில் யார்மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கூறப்படுகிறதோ நிச்சயமாக அந்த நடவடிக்கையை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

7. மானியக் கோரிக்கைகள், 2011-2012, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 18 - கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை)

(ஆ) கோரிக்கை எண் 17 - கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை)

(இ) கோரிக்கை எண் 32 - தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

} *தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2011-2012 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். 13-9-2011 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கைகள் மற்றும் அவற்றுக்கு முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின் மீதான விவாதத்திற்குப் பதிலுரை மற்றும் வாக்கெடுப்பு. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.*

***மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகம் போற்றும் நீதி நூலாம் பரிசுத்த வேதாகமத்திலே கூறப்பட்டுள்ளவாறு 'அவர் சிறியவனை புழுதியிலிருந்து எடுத்து எளியவனைக் குப்பையிலிருந்து*